**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.303** **நாள் : 07.10.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நாளை (08.10.2025) 11 வார்டுகளில் நடைபெறவுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நாளை (08.10.2025) திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம்-1), வார்டு-13ல் சுங்கச்சாவடி, எம்.ஜி.ஆர். சாலையில் உள்ள ஆர்.பி.சி. பொதுப் பள்ளி, மாதவரம் மண்டலம் (மண்டலம்-3),வார்டு-29ல் பொன்னியம்மன்மேடு, சுவாமி ராமலிங்கம் காலனி, சி பிளாக் 1வது குறுக்குத் தெருவில் உள்ள சாடோ பிட்ச், தண்டையார்பேட்டை மண்டலம் (மண்டலம்-4), வார்டு-39ல் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி மேல் நிலைப்பள்ளி, திரு.வி.க. நகர் மண்டலம் (மண்டலம்-6), வார்டு-65ல் கொளத்தூர், பூம்புகார் நகர், 2வது பிரதான சாலையில் உள்ள யோகேஷ்வர் மினி ஹால், அம்பத்தூர் மண்டலம் (மண்டலம்-7), வார்டு-92ல் முகப்பேர் கிழக்கு, கோல்டன் ஜார்ஜ் நகர், டி.என்.இ.பி. சாலையில் உள்ள எஸ்.கே.வி. திருமண மண்டபம், அண்ணா நகர் மண்டலம் (மண்டலம்-8), வார்டு-107ல் அமைந்தகரை, மேத்தா நகர், ஆபிசர்ஸ் காலனியில் உள்ள மாநகராட்சியின் விளையாட்டு மைதானம், தேனாம்பேட்டை மண்டலம் (மண்டலம்-9), வார்டு-122ல் கே.பி.தாசன் தெருவில் உள்ள எஸ்.ஐ.ஈ.டி. திருமண மண்டபம், கோடம்பாக்கம் மண்டலம் (மண்டலம்-10), வார்டு-137ல் எம்.ஜி.ஆர். நகர், பச்சையப்பன் பிரதான சாலையில் உள்ள அஞ்சலி மஹால், வளசரவாக்கம் மண்டலம் (மண்டலம்-11), வார்டு-147ல் கங்கா நகர், மேட்டுக்குப்பம் சாலையில் உள்ள ஹனு ரெட்டி தோட்டம், ஆலந்தூர் மண்டலம் (மண்டலம்-12), வார்டு-163ல் ஆதம்பாக்கம், கருணீகர் தெருவில் உள்ள லக்கி திருமண மண்டபம், அடையாறு மண்டலம் (மண்டலம்-13), வார்டு-178ல் தரமணி, 100 அடி சாலையில் உள்ள வார்டு அலுவலகம் ஆகிய 11 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**